



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில், கடல் பல்லுயிர் பாதுகாப்பில் ஒரு முக்கிய மைல்கல்லாக சென்னை, கிண்டியில் 14.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள தமிழ்நாட்டின் முதல் கடல் ஆமை பாதுகாப்பு மையத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் முதன்மை தலைமை வன பாதுகாவலரும் தலைமை இயக்குநருமான ஐ. அன்வர்தீன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் 1,238.19 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9,696 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உள்ளனர்.




திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதி ஆர்.கே.பேட்டை பஜார் வீதியில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்பி கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி உரையாற்றினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, ஒன்றிய செயலாளர் பா.சம்பத் உள்பட மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என 5ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்கள்.

## சென்னையில் கார்ல் மார்க்ஸ் முழு உருவச் சிலை! முதலமைச்சருக்கு நன்றி!



கார்ல் மார்க்ஸ்

மனிதகுலச் சிந்தனைமீது
மேலதிகத் தாக்கம்
செலுத்திய
மெய்யாளன்

பூகம்பம் இல்லாமல்
பூமியை அசைத்தவன்

உழைப்பால் உலகை
ஒன்றுபடுத்த நினைத்து
நாடற்றவனாய்ச்
செத்துப்போனவன்

அவன் எலும்புகளை
வறுமையின் ரம்பப் பற்கள்
அறுத்த போதும்
“தத்துவத்தின் வறுமை”
எழுதியவன்

ஆடைகளை
அடமானம் வைத்து
வெளிவர இயலாமல்
வீட்டுக்குள் முடங்கியவன்

குழந்தையின் காலணிகளை
அஞ்சல் செலவுக்கு
அடமானம் வைத்தவன்

மதங்களுக்கெதிராய்
மதமற்ற மதம் கண்டவன்

அறிவுக் காதல்
அவன்மீதெனக்கு

31.05.1993
லண்டன் ஹைகேட்டில்
மார்க்ஸின்
கல்லறை கண்டடைந்தேன்;
முட்புதர் களைந்து
மலர் வளையம் வைத்தேன்

கல்லறையில் உள்ளது
மார்பளவுச் சிலைதான்

சென்னையில்
வான்முட்டி நிற்பது
முழு உருவச் சிலை

நன்றி
முதலமைச்சர் அவர்களே!



கவிப்பேரரசு
வைரமுத்து

### பழம்பெரும் நடிகை திருமதி எம்.என். ராஜம் – மூத்த இயக்குனர் எஸ்.பி. முத்துராமன் பெறுகின்றனர்!

# 2024,2025 ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை,பிப்.7-**

**பழம்பெரும் நடிகை திருமதி எம். என். ராஜம் மற்றும் மூத்த இயக்குனர் எஸ்.பி. முத்துராமன் ஆகியோருக்கு 2024 , 2025 ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது அறிவிப்பு வெளியிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.**

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கும் வாழ்நாள் சாதனையாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்

விருது வழங்கப்படும் எனச் சட்டமன்றப் பேரவையில் 27.4.2022 அன்று செய்தித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2022 ஆம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளரான ஆரூர்தாஸ் அவர்களுக்கும்,

2023 ஆம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது கவிஞர் மு.மேத்தா அவர்களுக்கும்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பெண்மையைப் போற்றும் வகையில் சிறப்பினமாக 2023ஆம் ஆண்டுக்கு மட்டும் கூடுதலாக கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது பின்னணிப் பாடகி திருமதி பி.சுசீலா அவர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.

**2024-ஆம்ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது திருமதி.எம்.என்.ராஜம் தேர்வு**

தமிழ் திரையுலகின் பழம்பெரும் நடிகைகளில் ஒருவரான நடிகை எம்.என். ராஜம் , சிறு வயதிலேயே நாடகங்களில் நடிக்கத் தொடங்கி, 1949இல் குழந்தை நட்சத்திரமாக திரைப்படங்களில் அறிமுகமான இவர், 1950கள் மற்றும் 1960களில் முன்னணி நாயகியாக விளங்கினார். ரத்தக்கண்ணீர், பெண்ணின் பெருமை, புதையல், தங்கப்பதுமை,



நாடோடி மன்னன், பாசமலர், தாலி பாக்கியம், மங்கையர் திலகம் போன்ற பல்வேறு வெற்றிப் படங்களில் நடித்து ரசிகர்களின் அன்பைப் பெற்றார். 200க்கும் மேற்பட்ட தமிழ் திரைப்படங்களில் நடித்த இவர், பின்னர் தாயார், மாமியார் போன்ற பல்வேறு துணை வேடங்களிலும் சிறப்பாக நடித்து மக்கள் மனங்களில் நீங்கா இடம் பிடித்தவர்.

. அரங்கேற்றம், ஊருக்கு உழைப்பவன், போன்ற படங்களில் அவர் ஏற்ற அன்னை வேடங்கள் மறக்க முடியாதவை. தென்னிந்திய நடிகர் சங்கத்தின் முதல் பெண் உறுப்பினராகவும் பதிவான திருமதி எம் என் ராஜம் , தனது நீண்டகால கலைச் சேவைக்காக பல விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர்.

இத்தகைய பெருமைக்குரிய பழம் பெரும் நடிகை திருமதி எம்.என்.ராஜம் 2024ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**2025-ஆம்ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது முதுபெரும் திரைப்படஇயக்குநர் எஸ்.பி. முத்துராமன் தேர்வு**

எஸ். பி. முத்துராமன் பிரபலமாக எஸ். பி.எம். என்று அழைக்கப்படுபவர், தமிழ்த் திரைப்படத் துறையின் மூத்த இயக்குநர்களில் ஒருவராவார். 1935 ஏப்ரல் 7-ஆம் தேதி காரைக்குடியில் பிறந்த இவர், 1960-இல் களத்தூர் கண்ணம்மா படத்தில் உதவி இயக்குநராகத் தொடங்கி, பின்னர் 1970கள் முதல் 1990கள் வரை தமிழ் சினிமாவில் மிகவும் வெற்றிகரமான வணிக இயக்குநராக உயர்ந்தார்.

70-க்கும் மேற்பட்ட தமிழ்ப் படங்களை இயக்கியுள்ளார்.

இவரது சிறந்த படங்களில் ஆறிலிருந்து அறுபது வரை, புவனா ஒரு கேள்விக்குறி (1977), ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது (1978), முரட்டுக்காளை, எங்கேயோ கேட்ட குரல் (1982), சகலகலா வல்லவன் (1985) போன்றவை முக்கியமானவை. தமிழ் திரைப்படத் துறைக்கு அளித்த பங்களிப்புகளுக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

எளிமை, நேர்மை, பணிவு ஆகியவற்றுக்கு பெயர் பெற்ற இவர், தமிழ் சினிமாவின் வணிக வெற்றியை தீர்மானித்த மிக முக்கிய இயக்குநர்களில் ஒருவராக வரலாற்றில் இடம் பிடித்துள்ளார்.

கலைத்துறையில் திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் அவர்களின் சிறந்த பங்களிப்பைக் கருத்தில் கொண்டு, இவர் 2025ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பழம் பெரும் நடிகை திருமதி.எம்.என்.ராஜம், திரைப்பட இயக்குனர் எஸ்.பி. முத்துராமன் ஆகிய இருவருக்கும்

முதலமைச்சர் அவர்களால் ரொக்கப் பரிசாக தலா 10 இலட்சம் ரூபாயும், நினைவுப் பரிசும் வழங்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

### முதல்வர் காணொலியில் திறந்து வைத்தார்:

## மாதவரம் விநாயகபுரம் பேருந்து நிலையம்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. – ஜி.துக்காராம் – எஸ்.நந்தகோபால் – டி.சுந்தரம் பங்கேற்பு!

சென்னை, பிப்.7-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ விநாயகபுரத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நவீன பேருந்து நிலையத்தை முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் காணொளி வாயிலாக திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மாதவரம் விநாயகபுரத்தில் நடைபெற்ற விழாவில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், மண்டல குழு தலைவர் எஸ். நந்தகோபால், பகுதி செயலாளர் ஜி. துக்காராம், மாமன்ற உறுப்பினர்கள் திருமலை துரைசாமி, புத்தகரம் ஏழுமலை, வட்ட செயலாளர் எம்.சரவணன். மேலும் விநாயகபுரம் முதல் பெரம்பூர் வரை இரண்டு புதிய மகளிர் பேருந்துகளை துவக்கி வைத்தார்.

இதில் மாமன்ற உறுப்பினர் குட்டி மோகன், குணசுந்தரி, அம்மு, குட்டி மோகன், லட்சுமி காந்தன், டாக்டர் ஜி.பார்த்தசாரதி, வினோத்குமார், சந்தோஷ், இராமன், எஸ்.பி. கண்ணன், சி.பரமேஸ்வரி, பி.வி. ராஜு, அபீப் ரஹ்மான், கே .நரேந்திரன், எஸ். என். ராஜி, ஏ.வி. முருகன், எம். சீனிவாசன், பிஎஸ்என்எல் குமார், உமா மகேஸ்வரி, விக்னேஷ், வெற்றிவேல், உதயநிதி, தபு, கவிப்பிரியா மற்றும் குடியிருப்போர் நல சங்க நிர்வாகிகள், வியாபாரிகள், சங்க நிர்வாகிகள், பகுதி கழக வட்டக் கழக சார்பு மன்ற நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வட்ட செயலாளர் டி.சுந்தரம் நன்றி கூறினார்.



முதலமைச்சர் அவர்கள் நேற்று (06.02.2026) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக சேலம் மாவட்டத்தில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.196.92 கோடி மதிப்பிலும், ஊரக வளரச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.13.50 கோடி மதிப்பிலும், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறையின்சார்பில் ரூ.75 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாநகராட்சி, திடீர் நகர் திட்டப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ள புதிய குடியிருப்புகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### பதப்படுத்தப்பட்ட உணவுகளில் ஆபத்தான சேர்மங்கள்:

## மக்கள் சுகாதாரத்தில் ஒன்றிய அரசு அலட்சியமா?

### ஒன்றிய அமைச்சரிடம் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி கேள்வி

புதுடெல்லி, பிப். 7 —

பதப்படுத்தப்பட்ட உணவுகளில் பயன்படுத்தப்படும் தீங்கு விளைவிக்கும் உணவு சேர்மங்கள் மற்றும் செயற்கை நிறங்களால் பொதுச் சுகாதாரத்திற்கு ஏற்படும் அபாயங்கள் குறித்து, நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான, கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி, ஒன்றிய அமைச்சருக்கு கேள்வி எழுப்பி உள்ளார்.

இந்திய அரசு சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்திடம், ,

டைட்டானியம் டைஆக்சைடு, சன்செட் யெல்லோ, டார்ட்ரசின், அலூரா ரெட் ஏசி போன்ற தீங்கு விளைவிக்கும் உணவு சேர்மங்கள் மற்றும் செயற்கை நிறங்கள் பதப்படுத்தப்பட்ட உணவுகளில் பயன்படுத்தப்படுவதால் மனித உடலுக்கு ஏற்படும் சுகாதார பாதிப்புகள் குறித்து



அரசு அறிந்துள்ளதா? என அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும், இச்சேர்மங்கள் புற்றுநோய் உண்டாக்கும் தன்மை அல்லது அலர்ஜி ஏற்படுத்தும் அபாயம் கொண்டதா என்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அறிவியல் ஆய்வுகளின் முடிவுகள் என்ன?

இதுவரை அரசால் தடை செய்யப்பட்ட உணவு சேர்மங்களின் எண்ணிக்கை மற்றும் விவரங்கள் என்ன?

சர்வதேச அளவில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை கருத்தில் கொண்டு, இந்தியாவில் இவ்வகை சேர்மங்களை ஒழுங்குபடுத்த அல்லது தடை செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

என தொடர் கேள்வி கேட்டுள்ளார் ।.

இதற்கு பதிலளித்த சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சக ஒன்றிய அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ்,

மனிதர்கள் பாதுகாப்பான மற்றும் சுத்தமான உணவை பெறுவதை உறுதி செய்வது உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையம் (FSSAI) இன் முக்கிய பொறுப்பாகும் என்று தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் விதிமுறைகள், 2011ன் படி, உணவுகளில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ள செயற்கை நிறங்கள் மற்றும் சேர்மங்கள், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோடெக்ஸ் அலிமென்டாரியஸ் ஆணையத்தின் தரநிலைகளுடன் ஒத்திசைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விளக்கினார்.

மேலும், உணவு சேர்மங்களுக்கான தரநிலைகள், சுயாதீன அறிவியல் குழுக்கள் வழங்கும் அறிவியல் கருத்துகளின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன என்றும், புதிய அறிவியல் ஆதாரங்கள் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளை கருத்தில் கொண்டு அவை அவ்வப்போது மறுஆய்வு செய்யப்படுகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பொதுமக்களின் உணவு பாதுகாப்பு குறித்து கேள்வி எழுப்பிய கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பியின் இந்த நடவடிக்கை, மக்கள் நலன் சார்ந்த அரசியல் தலையீடாக பாராட்டுகளை பெற்றுள்ளது.

### மு.க.தமிழரசு, நே.சிற்றரசு, தயாநிதிமாறன், அன்பகம் கலை, எழிலன் நாகநாதன், சைதை சாதிக், லதா பிளாரென்ஸ், பங்கேற்பு!

## வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலின் மகளிர் படை ஆலோசனை கூட்டம்!

### ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

சென்னை, பிப்.7-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் விடுங்கதுள்ள அறிக்கை வருமாறு :-

முதலமைச்சரும், கழகத்தலைவருமான தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க மற்றும் துணை முதலமைச்சரும் மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்படி சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் 2026 சட்டமன்ற தேர்தலில் (112) (112-அ) ஆகிய வட்டதில் நாம் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற தலைமை கழக அறிவுறுத்தளின்படி பாகத்திற்க்கு 10 மகளிர்களை தேர்வு செய்து ஸ்டாலின் மகளிர் படை வருகின்ற சட்டமன்ற தேர்தலில் அதிக வாக்குகள் பெற்றுதர இல்லம் தோறும் சென்று மகளிர்கள் கழக ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் எடுத்து சொல்லி வாக்குகள் சேகரிக்க மகளிர்களுக்கு ‘வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலின் மகளிர் படை ஆலோசனை கூட்டம்’ இன்று (07.02.2026 - சனிக்கிழமை) மாலை 6.00 மணிக்கு வரதராஜபேட்டை மெயின் ரோடு பூங்காவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்க்கு : மு.க. தமிழரசு, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு எம்.சி., விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் சைதை சாதிக், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் லதா பிளாரென்ஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே 112 மற்றும் 112 அ வட்டத்திற்குட்பட்ட பாக பொறுப்பாளர்கள் அ. குப்பன் (மாவட்ட பிரதிநிதி), எம்.ஏ.ஜெஸ்டின் ராஜ் (மாவட்ட துணை தலைவர் ஆதி திராவிட நலக்குழு), வேல் முருகன் (வழக்கறிஞர் அணி தலைவர்), ஜி.வி.சரவணன் (மாவட்ட அமைப்பாளர் IT wing) கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் கழக உறிப்பினார்கள் அனைவரும் தவறாமல் கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றியுரை : வரதை த பரி 112 வது வட்ட செயலாளர், மு.மோகன் 112(அ) வட்ட செயலாளர்

பொருள் : வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலின் மகளிர் படை ஆலோசனை கூட்டம்

## திருவொற்றியூர் கிழக்குப் பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### பகுதிக் கழகச் செயலாளர் தி.மு.தனியரசு அறிக்கை!

சென்னை, பிப்.7-

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அவர்களின் அறிவுறுத்தலின் படி திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் 1-வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு (எனது) ஏற்பாட்டில் பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசை தம்பி தலைமையில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (8.2.2026 ஞாயிற்றுகிழமை) காலை 11 மணிக்கு திருவொற்றியூர் சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

ஆகையால் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மா வட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணியின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுகொள்கிறேன் .

பொருள்

வெல்லும் தமிழ் பெண்கள், தமிழ்நாடு தலைகுனியாது, SIR பணிகள்,

கழக பணிகள்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் 1-வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு வேண்டுகோள் விடுத்துள்ளார்.